அ2/161/2018

நாள்: .10.2018.

## சுற்றறிக்கை

தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து வரப்பெறும் ஆதரவற்ற விதவை சான்றுக்கான அறிக்கைகளை கீழ்க்கண்ட விதிமுறைகளின்படி விசாரணை செய்து அறிக்கை செய்ய வருவாய் ஆய்வாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. மனுதாரர்க்கு 18 வயதுடைய மகன் இருந்தால் பரிந்துரை செய்ய தேவையில்லை.
2. மாத வருமானம் ரூ.4,000/- மேற்படாமல் இருக்க வேண்டும்.
3. ஆண்டு வருமானம் ரூ. 48,000/- மேற்படாமல் இருக்க வேண்டும்.
4. வாடகை வீட்டில் குடியிருக்க வேண்டும். சொந்த வீடு இருந்தால் பரிந்துரை செய்ய தேவையில்லை.
5. மனுதாரருக்கு எந்த வித ஆதரவும் இருக்க கூடாது.
6. மனுதாரரின் கணவர் பெயரிலோ அல்லது மனுதாரர் மாமனார், மாமியார் பெயரில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருந்தாலும் மனுதாரருக்கு சான்று பரிந்துரை செய்ய தேவையில்லை.
7. மனுதாரர் வறிய நிலையில் இருக்க வேண்டும்.
8. மறுமணம் புரிந்திருக்கக் கூடாது.
9. மனுதாரரின் சகோதரர் மற்றும் சகோதரி, தாய் வழியிலும் ஆதரவு இருக்கக் கூடாது.
10. மனுதாரரின் குழந்தைகள் ஆங்கில வழி கல்வி பயின்று வந்தால் சான்று பரிந்துரை செய்ய தேவையில்லை.

வருவாய் வட்டாட்சியர் *க்காக*
கடையநல்லூர்.

*11.10.18*

பெறுநர்

அனைத்து வருவாய் ஆய்வாளர்கள் (கடையநல்லூர், ஆய்க்குடி மற்றும் புளியங்குடி)

நகல்

கிராம நிர்வாக அலுவலர்கள்.

Scanned by CamScanner